WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 06.02.2026

CORAM

THE HONOURABLE MR.**JUSTICE V. LAKSHMINARAYANAN**

**Contempt Petition No.3807 of 2025**

Sumathi
D/o. Krishnanayakar, Door No. 136k3,
40 feet road, Nedunsalai Nagar, Salem.

... Petitioner

Versus

A.W.Syed Musthafa Kamal,
The Municpal Commissioner,
Municipal Commissioner Office,
Ranipet Main Road, Attur,
Salem - 636102. … Respondent

**PRAYER:** Petitions filed under Section 11 of the Contempt of Courts Act, 1971, to punish the contemnor for their willful and wanton disobedience of the order passed by this Court in WP No.21249 of 2025 dated 17.06.2025.

| | |
|---|---|
| For Petitioner | : Mr.M.Pozhilan<br>for Mr.R.Manoharan |
| For Respondents | : Ms.Indhu Bala<br>Additional Government Pleader |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**O R D E R**

I heard Mr.M.Pozhilan, learned counsel for Mr.R.Manoharan, appearing for the petitioner and Ms.Indhu Bala, Additional Government Pleader for the respondent.

2. When the matter was taken up, Ms.Indhu Bala, has produced an order passed by the respondent. The same is scanned and extracted hereunder:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

Item 30

நகராட்சி அலுவலகம்,
ஆத்தூர்,
நாள். 05.02.2026.

ந.க.எண்.3714 /2024 /எப்1

# அறிவிப்பு

**பொருள்:** ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு E- பிளாக்-5 - நகரளவை எண்–47/2 – இல் உள்ள 30 அடி அகலமுள்ள தார்சாலையினை சன்சிட்டி மனைப்பிரிவு உரிமையாளரால் சுற்றுச்சுவர் கட்டி தடைசெய்யப்பட்டுள்ளதை அகற்றக் கோரி திருமதி.சுமதி க/பெ கிருஷ்ணநாயக்கர் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP.NO. 21249/2025 –இல் வழக்கு தொடரப்பட்டு வழக்கின் தீர்ப்பு வரப் பெற்றது. மேற்படி வழக்கில் தங்களை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்பதால் தங்கள் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி மனு அளிக்கப்பட்டதை தொடர்ந்து தாங்கள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP.NO. 48097 /2025 வழக்கு தொடர்ந்துள்ளீர். மேற்படி வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு கடந்த 29.12.2025 அன்று நடத்தப்பட்ட விசாரணையில் தங்களையும், சன்சிட்டி உரிமையாளர் மற்றும் எதிர்மனுதாரரும் ஒரே நேரத்தில் வரவழைத்து அவரவர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்ய கோரப்பட்டது. அதன்படி கடந்த 03.02.2026 அன்று காலை 11.00 மணியளவில் நகர்சார் ஆய்வாளரால் அளவுப்பணி மேற்கொள்ளப்பட்டதில் தாங்கள் சுற்றுச்சுவர் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யப்பட்டது – எனவே ஆக்கிரமிப்பினை தாங்களாகவே அகற்றிக் கொள்ள கோருதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. திருமதி.சுமதி க/பெ கிருஷ்ணநாயக்கர் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP.NO. 21249/2025 தீர்ப்பு நாள்.17.062025
2. செல்வி. மகாசுவேதா த/பெ நாகராஜன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP.NO. 48097 /2025
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள். 24.12.2025
4. செல்வி. மகாசுவேதா த/பெ நாகராஜன் ,329/423 கண்ணாடி மில் அருகில், தெற்குகாடு, ஆத்தூர்.அவர்களின் மனு நாள். 29.12.2025
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள். 05.01.2026
6. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்12.01.2026
7. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்30.01.2026
8. நகர்சார் ஆய்வாளரின் குறிப்பு நாள். 04.02.2026

*******

பார்வை 1–இல் காணும் திருமதி.சுமதி க/பெ கிருஷ்ணநாயக்கர் என்பவர் ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு E- பிளாக்-5 - நகரளவை எண்–47/2 – இல் உள்ள 30 அடி அகலமுள்ள தார்சாலையினை சன்சிட்டி மனைப்பிரிவு உரிமையாளரால் சுற்றுச்சுவர் கட்டி தடைசெய்யப்பட்டுள்ளதை அகற்றக் கோரி திருமதி.சுமதி க/பெ கிருஷ்ணநாயக்கர் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP.NO. 21249/2025 –இல் வழக்கு தொடரப்பட்டு வழக்கின் தீர்ப்பு வரப் பெற்றது. மேற்படி வழக்கில் தங்களை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்பதால் தங்கள் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி மனு அளிக்கப்பட்டதை தொடர்ந்து தாங்கள் பார்வை 2–இல் காணும் படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP.NO. 48097 /2025 வழக்கு தொடர்ந்துள்ளீர்.

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

மேற்படி வழக்கின் தீர்ப்பில் கடந்த 19.12.2025—க்குள் தங்களது தரப்பு ஆவணங்களை சமர்ப்பித்த பின் 31.12.2025— க்குள் இறுதி உத்தரவு பிறப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி தாங்கள் 18.12.2025 இன்று தங்களது தரப்பு ஆவணங்களை சமர்ப்பித்துள்ளீர். அதனை பரிசீலனை செய்து பார்வை 3—இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பின் படி தங்களை இவ்வலுவலகத்தில் 29.12.2025 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள தெரிவிக்கப்பட்டது. தாங்கள் மேற்படி விசாரணையில் கலந்து கொண்டு தங்கள் தரப்பு ஆவணங்களை காண்பித்துள்ளீர். இருப்பினும் நகர்சார் ஆய்வாளரால் கொடுக்கப்பட்ட அறிக்கையின் இணைப்பில் உள்ள புலவரைபடத்தில் தங்களுக்கு மாறுபட்ட கருத்து உள்ளதால் நகராட்சிக்கு வழங்கப்பட்ட தார்சாலையினை நகர்சார் ஆய்வாளரால் அளந்து காண்பிக்க தெரிவிக்கப்பட்டது. மேலும் தங்களையும், சன்சிட்டி உரிமையாளர் மற்றும் எதிர்மனுதாரரையும் ஒரே நேரத்தில் வரவழைத்து அவரவர் வைத்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்யுமாறு பார்வை 4—இல் காணும் மனுவில் தெரிவித்துள்ளீர். பார்வை 5— இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பின் படி தங்களை இவ்வலுவலகத்தில் 08.01.2026 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள தெரிவிக்கப்பட்டது. தாங்கள் மேற்படி விசாரணையில் கலந்து கொண்டு தெரிவித்துள்ள படி பார்வை 6— இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பின் படி தங்களையும், சன்சிட்டி உரிமையாளர் மற்றும் எதிர்மனுதாரரையும் ஒரே நேரத்தில் வரவழைத்து நகர்சார் ஆய்வாளர் முன்னிலையில் அளவீட்டுப்பணி 30.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அப்பணி பல்வேறு நிர்வாக காரணங்களினால் செயல்படுத்த முடியவில்லை. பார்வை 7— இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் அளவீட்டுப்பணியானது 03.02.2026 அன்று காலை 11.00 மணியளவில் மேற்கொள்ள இருப்பதால் தங்களிடம் உள்ள ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட இடத்தில் ஆஜராகுமாறு அறிவிப்பு வழங்கப்பட்டது. அதில் தாங்கள் ஆஜராகவில்லை. எதிர்மனுதாரரும், அவரது வழக்கறிஞரும் ஆஜராகினர். சன்சிட்டி மனைப்பிரிவு உரிமையாளர் ஆஜராகவில்லை பார்வை 7— இல் காணும் நகர்சார் ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் தாங்கள் சுற்றுச்சுவர் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே தாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள சுற்றுச்சுவரினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 128 (1) (b)—ன்படி இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 14 நாட்களுக்குள் தாங்களாகவே அகற்றிக் கொள்ளுமாறு இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது. தவறும் பட்சத்தில் மேற்காணும் சட்டப்பிரிவு 128(2)—ன் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன்மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்
ஆத்தூர் நகராட்சி

பெறுநர்:

செல்வி. மகாசுவேதா த/பெ நாகராஜன்
329/423 கண்ணாடி மில் அருகில்,
தெற்குகாடு, ஆத்தூர்.

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



3. This is in compliance with the order passed by this Court. Ms.Indhu Bala states that the respondent has found that there are encroachers over the property. She states that time has been granted to the encroachers to vacate their encroachment. She adds that in case, the encroachers do not vacate and hand over possession to the respondent, the respondent will initiate appropriate action by invoking the provisions under the Tamil Nadu Urban Local Bodies Act, 1998. Her statement is recorded.

4. Though the order has been complied with some delay, I am not inclined to initiate contempt. The Contempt Petition is closed.

**06.02.2026**

Internet : Yes/ No
Speaking Order/ Non-speaking Order
jv

To
A.W.Syed Musthafa Kamal,
The Municpal Commissioner,
Municipal Commissioner Office, Ranipet Main Road,
Attur, Salem - 636102.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**V. LAKSHMINARAYANAN, J.**

jv

**Contempt Petition No.3807 of 2025**

**06.02.2026**



https://www.mhc.tn.gov.in/judis